மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

இமா. 3/2019
நீ.மா.எண். 10/2019
ம.சா 1

தேதி :-30.07.2021

பெயர் : நவிததுரை

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2021ஆம் ஆண்டு ஜுலை திங்கள் தேதி 30.07.2021 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நாராயண நாடார் அவர்கள் நன்கொடை பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். தேதி தெரியவில்லை. அந்த விவரம் எனக்கு கொஞ்சம் தெரியிம் முழுமையாக தெரியாது. அந்த நன்கொடை பத்திரம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். 1928 தேதியில நான் கொடை பத்திரத்ததை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் தேடிப் பார்த்து தாக்கல் செய்யலாம். அந்த ஆவணத்தை காட்டினால் படிக்க தெரியுமா என்றால் தற்போதைய எழுத்து தெரியும் பழைய எழுத்து தெரியாது. என்னிடம் காட்டப்படும் கடந்த 17.5.1928தேதயில ்கே. நாராயண நாடார் ஞா. துரைபண்டிநாடாருக்கு எழுதிக் கொடுத்த நன் கொடை ஆவணம் சான்றியிட்ட நகல் என்றால் சரிதான். **அது ம.தா.ச ஆ 12 ஆகும்**. ம.தா.ச ஆ 12 ல் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு வாசிக்க தெரியாது. இந்த ஆவணம் எதிர்மனுதாரர் தாத்தா நாராயண நாடார் எனது தாத்தா துரைபாண்டி நாடார் அவர்களுக்கு எழுதி கொடுத்த நன்கொடை ஆவணம் என்றால் சரிதான். நன்கொடை ஆவணம் 2ம் பக்கத்தில் கண்டுள்ள வாசகத்தினை படித்து காட்டி சாட்சியிடம் கேட்ட போது அவ்வாறு தான் உள்ளது. ஆனால் அதனை பற்றி எனக்கு தெரியாது. மேற் சொன்ன ஆவணத்தில் வழக்கு சொத்தின் சர்வே எண். காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. இந்த வழக்கு சொத்திற்கு ஆவணம் இல்லை என்று சாட்சி பதிலளித்தார். வழக்கு சொத்திற்குரிய பழைய சர்வே எண். குறித்து கேட்ட போது எனக்கு தெரியாது வருவாய் துறையில் தான் கேட்க வேண்டும். என்னிடம் காட்டப்படும் நன்கொடை ஆவணம் தவிர வேறு ஆவணம் வழக்கு சொத்து குறித்து என்னிடம் உள்ளதா என்றால் என் கைவசம்

உள்ளது. அந்த ஆவணம் 1932ம் ஆண்டிக்குரியது. தேதி மாதம் நினைவில்லை. அதில் கண்டுள்ள சர்வே எண் குறித்து கேட்ட போது சர்வே எண்.52/2 என சாட்சி பதலளித்தார். மனு சொத்து சர்வே எண். 52/2 ல் தான் உள்ளதா என்றால் சரிதான். சர்வே எண். 52/2க்குரிய தற்போதைய சர்வே எண் என்னவென்றால் 48/5 என சாட்சி பதலளித்தார். இந்த 52/2 தான் சர்வே எண். 48/5 என என்னால் நிருபீக்க முடியுமா என்றால் வருவாய் துறையில் கேட்க வேண்டும். வருவாய் துறையினைர சாட்சியாக அழைத்து நீருபிக்க நான் தயாராக உள்ளேனா என்றால் சாட்சி தயாராக உள்ளேன். மனு சொத்தில் ஒரே சர்வே எண். காட்டப்பட்டுள்ளது. சர்வே 52/2 சொத்தினை யார் யாருக்கு எழுதி கொடுத்துள்ளார் என்றால் துரைபாண்டி நாடருக்கு ஞானமுத்து நாடார் மகன்கள் திரவிய நாடார், பொன்னையா நாடார், சுந்தர நாடாரால் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் கடந்த 10.08.1932ம் ஆண்டிக்குரிய புள்ளி விடுதலை ஆவணம் துரைபாண்டி நாடருக்கு ஞானமுத்து நாடார் மகன்கள் திரவிய நாடார், பொன்னையா நாடார், சுந்தர நாடாரால் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது ம.தா.ச ஆ 13 ஆகும். இந்த ஆவணத்தில் மேற்கு புறத்தில் சர்வே எண். 52/1 புஞ்சையில் இடம் இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாத்தாவின் அப்பா ஞானமுத்து நாடார் ஒரு உயில் எழுதி வைத்த விபரம் எனக்கு தெரியாது. அவ்வாறு உயில் எழுதி வைத்த விபரம் தெரிந்து கொண்டு நான் தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவசுப்பிரமணியம் என்ற தாத்தா கே.நாராயண நாடார் மனுசொத்தில் முன்று வீடுகள் கட்டினார் என்றால் இல்லை. கே.நாராயண நாடார் தான் முன்று வீடுகள் கட்டினார் என்றால் சரியல்ல. பிரமான வாக்குமுலத்தில் 3வது பக்கத்தில் கே.நாராயண நாடார் அவர்களால் 1916/1917 கட்டப்பட்ட பூர்வீக வீடுகள் என்பது வாஸ்துவமே என கண்டுள்ளதா என்றால் அவ்வாறு கண்டுள்ளது. அந்த வீட்டினை எனது தாத்தா துரைபாண்டிநாடாருக்கு கொடுக்கபட்டதாக சொல்லபட்டது குறித்து ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணம் தான் ம.தா.ச ஆ 13 ஆகும். இந்த ஆவணத்தில் சொத்து விபரத்தில் இந்த முன்று வீடுகள் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது ஒரே வீடுகளாக காட்டப்பட்டுள்ளது. கதவு எண். காட்டப்படவில்லை. பழைய தீர்வை உள்ளது. மேற்சொன்ன ஆவணத்தில் அவ்வாறு வீடு காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. ம.தா.ச ஆ 13 ன் அடிப்படையில் தான் வீடு எனக்கு

கிடைத்தாக மனு சொத்து எனக்கு கிடைத்தாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரமான வாக்குமுலத்தில் 4வது பக்கத்தில் 13 மற்றும் 14வரியினை படித்து காட்டி கேட்ட போது சாட்சி சரி என ஒப்புகொண்டுள்ளார். பிரமான வாக்குமுலத்தில் சொல்லியுள்ள உயில் எந்த ஆண்டிற்குரியது என்றால் சாட்சி நினைவில்லை என பதலளித்தார். உயிலினை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அந்த உயிலில் இந்த வீட்டினுடைய சர்வே எண் காண்பிக்க பட்டிருக்குமா என்றால் சரியான விபரம் தெரியவில்லை. வழக்கு சொத்திலுள்ள தீர்வையை ரத்து செய்ய வேண்டி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதன் எண் தற்போது நினைவில்லை. அந்த ரிட் மனு யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்பது நினைவில்லை. ரிட் மனுவில் ஏற்கனவே இந்த நீதிமன்றத்தில் நடந்த பாக பிரிவினை வழக்கு விபரம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ரிட் மனு உத்திரவு குறித்து எனக்கு தெரியாது. மனு சொத்து முன்பு புஞ்சை நிலமாக இருந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் வேறு சொத்திற்குரியது. மனு சொத்து புஞ்சையாக உள்ள 48/5 என்றால் சரிதான். 48/5 க்குரிய கணனி பட்டா என் கைவசம் இல்லை. புத்தக வடிவில் தான் என் கைவசம் உள்ளது. எனது மனுவுடன் கணனி பட்டா தாக்கல் செய்துள்ளேன் என்றால் வாய்ப்பு இல்லை. கணனி பட்டா எனது மனுவுடன் உள்ளதை தாக்கல் செய்தால் எனது பெயர் அதில் இல்லாதது தெரியவரும் என்பதால் அதனை குறியீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. புஞ்சை 48/5 தான் நத்தமாக மாறும் போது 48/5 எ மற்றும் 5 பி என சப்டிவிசன் யாக மாறியுள்ளது என்றால் தவறு. நான் சென்னையில் 20 வருடமாக வாழ்ந்து வருகிறேன். எனது தகப்பனார் கடந்த 1992ம் வருடத்தில் மனு சொத்தில் இறந்து போனார். எனது தந்தையார் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தேவைபட்டால் தாக்கல் செய்கிறேன். அவ்வாறு தாக்கல் செய்தால் எனது தகப்பனார் இறந்த இடம் விபரம் தெரிய வரும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் செல்வராஜ் வழக்கறிஞர் முலமாக நான் அனுப்பிய வழக்கிறிஞர் அறவிப்பு என்றால் யோசித்து தான் சொல்லமுடியும். 10.08.1932ம் தேதிய புள்ளி பத்திரம் முலமாக மனு சொத்தில் உள்ள வீடுகள் எனக்கு பாத்தியப்பட்டது என்பதாக கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். எனது தாயார் எனக்கு எனது சகோதரார்க்கும் ஒர் செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி

கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தேதி நினைவில்லை. 2013வருடம் என சாட்சி பதலளித்தார். அந்த ஆவணம் மனு சொத்தினை பொருத்து தான் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எனது தாயார் அவருக்கு சொத்து கணவர் இறந்து போனதால் வந்தாதாக தெரிவித்துள்ளார். சாட்சி மீண்டும் தெரியவில்லை என்று பதில் அளித்தார். மேற்சொன்ன ஆவணம் பத்திர எழுத்தர் தயார் செய்தார். சாட்சி கையொப்பம் போட்ட நபர்கள் அந்த நேரத்தில் அலுவலகம் வந்த வெளியூர் நபர்கள் போட்டார்கள். இதனை ஏரல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தேன். ஆவணம் தயாரித்தது மற்றும் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் அனைவரும் போலி யான நபர்கள் என்றாலும் அது குறித்து சிசி வழக்கு நீதிமன்றத்தில் நடக்கிறது என்றால் சரிதான். ம.தாச ஆ1 ல் கண்டுள்ள 1 வது நபர் பெயர் தவறு என சாட்சி பதிலளித்தார். 2வது நபர் சரி என்றும், 1வது நபர் எதிர்மனுதாரர் சிவசுப்பிரமணியத்தில் தகப்பனார் என்றால் சரிதான். 2வது நபர் எனது தாயார் என்றால் சரிதான். இந்த பட்டாப்படி இந்த சொத்தில் பாதி தங்கவேலுக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை. நாராயண நாடார் மனைவி என தாயார் பெயர் தவறுதலாக பட்டாவில் சேர்க்கப்பட்டது என்றால் தவறு. உண்மையாக நாராயண நாடார் மனைவி பெயர் இல்லை என்றால் தவறு. ம.தாச ஆ 1ன்படி நாராயண நாடார் குடும்பத்தாருக்கு தான் மூழு சொத்து பாத்தியம் என்றால் தவறு. பட்டாவில் உள்ள தவறினை வைத்து நான் மோசயடியாக பத்திரம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.தாச ஆ 2 ல் 9 பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ள நத்தம் நிலவரிதிட்ட துூய சிட்டா நகல் செட்டில்மெண்ட் ஆவண பதிவிற்காக மோசடியாக உள்ள ஆவணம் என்றால் சரியல்ல. ம.தாச ஆ 6 வீட்டு வரி ரசீதில் 1/128 என கண்டுள்ளது என்றால் இது பழைய எண்ணாகும். புதிய எண். 168, 169, 170 ஆகும். 1/128 கதவு எண் தான் தற்போது 168, 169,170 என மாறியுள்ளதாக நிருபீக்க தயாராக உள்ளேனா என்றால் யோசித்து முடிவு எடுக்க வேண்டும். ம.தாச ஆ 13 ல் உள்ள ஒரே வீட்டினுடையது தான் கதவு எண் 1/128 என்றால் சரியல்ல. மனு சொத்திற்கும் கதவு எண். 1/128 சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. ம.தாச ஆ 8 பட்டா புத்தகத்தில் ஒரே சொத்து தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.தாச ஆ 8 யானது 1973ல் வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். 1928ல் எனது தாத்தாவிற்கு நன்கொடையாக கொடுக்கப்பட்ட சொத்தினை இந்த பட்டாவில்

சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த பட்டா மோசடியாக உருவாக்கப்பட்டது என்றால் தவறு. ம.தாச ஆ 9 மின்சார வரிகள் அனைத்திலும் கதவு எண் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். இது வழக்கு சொத்திற்கு சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. ம.தாச ஆ 10 ஜமீன் பட்டா வில் மனு சொத்தின் சர்வே எண். காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண். 52/2 என கண்டுள்ளது. ம.தாச ஆ 11 சிட்டா மோசடி ஆவணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டது என்றால் தவறு. இந்த சிட்டவிலும் எதிர்மனுதாரர் பெயர் உள்ளது என்றால் தவறு. மனு சொத்து எதிர்மனுதாரரின் தாத்தா கே நாராயண நாடார் அவருக்கு பாத்தியப்பட்டது என்றால் தவறு. அவருடைய காலத்திற்கு பிறகு அவருடைய முன்று மகன்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் தவறு. 1960 வாக்கில் வாய்மொழி பாகபிரிவினை அடிப்படையில் எதிர்மனுதாரர் தகப்பனார் தங்கவேல் நாடாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தங்கவேல் நாடாருக்கு காலத்திற்கு பிறகு அவருடைய வாரிசுகள் மு.வ 20/2004 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்து பாகம் பிரித்து கொண்டார் என்றால் சரியல்ல. பாகபிரிவினை அடிப்படையில மனு சொத்து 12 செண்டில் 6 செண்ட் 1 வது எதிர்மனுதாராருக்கு மீதி 6 செண்ட் 2 வது எதிர்மனுதாராருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அது சரியல்ல. பாகபிரிவினைக்கு பிறகு மனு சொத்தினை தனிதனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. மனு சொத்து சம்பந்தமாக எதிர்மனுதாரரின் உறவினர்கள் பிரச்சனை செய்ததால் எதிர்மனுதாரர்கள் மனு சொத்து சம்பந்தமாக நீதிமன்றததில் மு.வ எண். 20/2010 தாக்கல் செய்து தீர்ப்பானை பெற்றுள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா துரைபாண்டிநாடாருக்கு கே நாராயண நாடார் எழுதிகொடுத்த சொத்தை தவிர வேறு சொத்துகள் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. எனது தாத்தாவின் அப்பா ஞானமுத்து நாடார் எந்த விதமான சொத்து எனது தாத்தாவிற்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு மனு நடக்கும் விபரம் அசல் வழக்கு நடக்கும் விபரம் நன்றாக தெரியும் என்றால் இல்லை. எதிர்மனுதாரர் மு.வ எண். 156/2017ல் தீர்ப்பானையின் பலனை அடையவிடகூடாது என்பதற்காக நான் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனு சொத்து எனக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல. நான் பொய் கட்சி செய்கிறேன் என்றாலும் மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை